**ஜூலை - 14**

**"சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது." - எபே 4 : 31**

தெய்வீகப் பிரமாணத்தை உயர்வாக மதிக்கிற முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவன் தன்னுடைய உயர்ந்த கருத்தின்படி, கர்த்தருடைய பார்வையில், பகைத்தல் கொலை என்றும், அவதூறு பண்ணுதல் சதியான கொலை என்றும், அயலானுடைய நல்லபெயரை நாசம் செய்தல் கொள்ளையும், சூறையுமாகும் என்று காண்கிறான். சபையில் ஒப்புக்கொள்ளப்பட்ட தேவனுடைய ஜனங்கள் மத்தியில் இவைகளில் ஏதாவதொன்று செய்யப்படுமானால், அது இரண்டத்தனையான தீங்காகும். அதாவது, ஒரு சகோதரனுக்கு விரோதமாகச் செய்த சதியான கொலையும், கொள்ளையுமாகும். "ஒருவனையும் தூஷியாதிருங்கள்" என்ற இந்தச் சட்டத்திற்குரிய ஒரே விதிவிலக்கு செய்யப்பட்ட ஒரு தீங்கை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்த மிகவும் அவசியமாயிருக்கிறது என்று அறியும்போது அத்தீங்கைத் தெரிவிப்பது. இப்படித் தெரிவிப்பது இருதயத்தின் இஷ்டத்துக்கு விரோதமானதாக இருக்கும். ஆனால் அவசியத்தின் காரணமாகச் சொல்லப்படுகிறது. ஏனென்றால், அப்படிச் சொல்லாவிட்டால், அவர்களுக்குக் கெடுதி உண்டாக்கும். **- Z '99, 71 (R 2442)**

கசப்பும், கடுங்கோபமும், கோபமும், புறங்கூறுதலும், துர்க்குணமும் மாம்சத்தின் கிரியைகளாயிருக்கின்றன. ஆகையால், பரிசுத்தவான்கள் அவைகளை விலக்கி வைப்பது தகுதியாயிருக்கிறது. இவைகளுக்கு எதிராக விசுவாசத்தையும், நம்பிக்கையையும், அன்பையும் உறுதியான தீர்மானத்தையும் அப்பியாசிக்கவும், தேவனுடைய வார்த்தையின் சுத்திகரிக்கும் வல்லமையையும் உபயோகிக்க வேண்டும். இந்த நல்ல குணங்களினால் நம்முடைய மனோபாவங்களை இவைகளிலிருந்து பிரிக்கவும், நமது கவனத்தை இவைகளிலிருந்து திருப்பவும் இவைகளைத் தடுக்கவும், தள்ளிவைக்கவும், இவைகள் நம்மில் நுழையமுடியாத நிலையை நாம் அடையவும் நாடுவோமாக. **- P '32, 95.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**ரோம 12:14,18-21; கொலோ 3:8,13,19; தீத் 3:2; யாக் 3:5-18; 4:11; 1பேது 2:1,23; 3:9; 1கொரி 13; எபே 4:26,32; 5:1,2; 2கொரி 3:12-18.**

**கோபுர வாசிப்பு : Z '11, 43 (R 4759)**

**வினாக்கள் : இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தின் அனுபவங்கள் என்ன? அவைகள் எவ்வாறு சந்திக்கப்பட்டன? பலன்கள் எவை?**